**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.74/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருலோகச் சந்திரன் | தொழில் | : ஓய்வு பெற்ற ஆசிரியர் |
| தகப்பனார் பெயர் | : கருப்புச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 63 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**வாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் ? தெரியும். தாவா சொத்தான 15 செண்ட் பூமியில் வாதிகளுக்கும் உரிமை இருப்பதாக கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் சொல்லியுள்ள 15 செண்ட் பூமியானது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் ? சர்வே எண்.424/2சி2 ல் உள்ளது. நான் சொல்லியுள்ள 15 செண்ட் பூமி காலியிடமாக உள்ளதா என்றால் ? ஆமாம், காலியிடமாக தான் உள்ளது. 15 செண்ட் பூமிக்கு நான்குமால் தெரியுமா என்றால் ? சரியாக நினைவில் இல்லை. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் ? தாராபுரம் ரோட்டில் P.N.K. மண்டவத்திற்கு எதிரே குடியிருந்து வருகிறேன். நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றால் ? சரிதான். எந்த ஆண்டில் இருந்து எந்த ஆண்டு வரை ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன் என்றால் ? 1997 ம் ஆண்டு முதல் 2021 ம் ஆண்டு வரை ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன். வாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து கடந்த 1996ம் ஆண்டே கிரைய பத்திரம் உள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட கிரைய பத்திரம் எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு வாதிகள்

வழக்கில் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளதை தெரிந்துகொண்டேனா என்றால் ? இல்லை. வாதிகள் தாக்கல் செய்த பத்திரத்தை நான் பார்வையிடாமல் எதன் அடிப்படையில் வாதிகள் கிரையம் பெற்ற 06.12.1996 தேதியிட்ட கிரைய ஆவணமானது மலரணையான ஆவணம் என்று எதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? ஏற்கனவே பழனி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கானது தள்ளுபடி ஆன பிறகு மீண்டும் சொத்தினை எழுதி வாங்கி கொண்டார்கள். நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆன வழக்கை நான் பதிவு அலுவலகத்தில் கொடுத்து பதிவு செய்தேனா என்றால் ? பதிவு செய்துள்ளேன். எந்த ஆண்டு பதிவு செய்தேன் என்றால் ? 1996ம் ஆண்டு பதிவு செய்தேன். மாதம் எந்த மாதம் என்று தெரியுமா என்றால் ? நினைவில் இல்லை. 1996ம் ஆண்டு எனக்கு சாதகமாக கிடைத்த தீர்ப்பாணையை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததாக சொல்லியுள்ள நான் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? தாக்கல் செய்துள்ளேன். வாதிகள் சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பாக வில்லங்கசான்று பார்த்துள்ளார்கள். அந்த விபரத்தை நான் இவ்வழக்கில் பார்வையிட்டுள்ளேனா என்றால் ? இல்லை. வாதிகள் சொத்தினை கிரையம் பெற்ற போது எந்தவித வில்லங்கமும் இல்லாமலும், நான் பெற்ற தீர்ப்பாணை வில்லங்கத்தில் இல்லாமலும் இருந்ததால் வாதிகள் சொத்தினை கிரையம் பெற்றார்கள் என்றால்? அது பற்றி எனக்கு தெரியவில்லை. சொத்தினை கிரையம் பெற்ற காலம் முதல் நாளது வரை சொத்தினை வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ? இல்லை. எங்களது அனுபவத்தில் தான் உள்ளது. நடராஜ், பழனியம்மாள், தங்கம்மாள், பாக்கியம், அருள்மொழி, ராமலிங்கம் மற்றும் எனது அனுபவத்தில் உள்ளது. எப்போது இருந்து சொத்தினை அனுபவித்து வருகிறேன் என்றால் ? கிட்டத்தட்ட சுமார் 50 ஆண்டு காலமாக அனுபவித்து வருகிறேன். தாவா சொத்திற்குரிய பட்டா, சிட்டா, வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக வேண்டி

புறம்பாக சொல்கிறேன் என்றாலும், தாவா சொத்தை பொறுத்து எக்காலத்திலும் வருவாய்துறை ஆவணங்களில் எனது அனுபவத்தில் இல்லை என்றால் ? சரியல்ல. வாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்று 28 ஆண்டுகள் ஆகக்கூடிய நிலையில் மேற்படி வாதிகள் கிரையம் பெற்ற பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று வாதிகள் கிரையம் பெற்ற பத்திரத்தை பொறுத்து பரிகாரம் கேட்கவில்லை என்றால் ? சரியல்ல. ஏற்கனவே வழக்கு நடந்தததாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த ஆண்டுதாக்கல் செய்யப்பட்டு, எந்த ஆண்டு முடிந்தது என்றால் ? 1993ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 1996ம் ஆண்டு முடிவடைந்தது. நான் குறிப்பிட்டுள்ள வழக்கு நடைபெறுவதற்கு முன்பாகவே கடந்த 14.12.1990ம் தேதியில் 1–ம் பிரதிவாதி ஒட்டன்சத்திரம் பேரூராட்சி நிர்வாகத்திற்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்த விபரத்தையும், வழக்கு நிலுவையில் இருந்து காலத்தில் 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் எழுதிக் கொண்ட கிரைய உடன்படிக்கை பத்திரங்கள் விபரத்தையும் மேற்படி வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ? குறிப்பிட்டுள்ளேன். நான் எந்த ஒரு விபரத்தையும் வழக்கில் குறிப்பிடாமல் இருந்துவிட்டு தற்போது குறிப்பிட்டதாக வேண்டி வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. 15 செண்ட் பூமியானது வாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்று எனக்கு ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேனா என்றால் ? தீர்ப்பு மற்றும் எங்களது அனுபவத்தின் அடிப்படையிலும் கோருகிறேன். கடந்த 25.07.2016ம் தேதி வாதிகள் தாவா சொத்தை சமன் செய்து வேலிகள் போட முயற்சித்த போது நாங்கள் இடையூறு செய்தோம் என்றால் ? சரியல்ல. தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், தீர்ப்பாணை தங்களுக்கு கிடைத்ததாக சொல்லியுள்ள நிலையில் இவ்வழக்கில் எங்களது தரப்பில் எதிர்கோருரிமை (Counter Claim) கேட்டுள்ளேனா என்றால் ? இல்லை. கடந்த 06.12.1996–ம் தேதியில் வழக்கு சொத்துக்களை பொறுத்து வாதிகள் கிரையம்பெற்றதால் கிரையத்தின் தன்மை படி வாதிகளுக்கு

சட்டப்பூர்வ உரிமை மற்றும் அனுபவம் உள்ளது என்றால் ? சரியல்ல. வாதிகளின் உரிமையை மறுக்கும் நோக்கில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.02 18:41:50 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்